EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 38

## இளங்கோவடிகளின் மாண்பும் பாவலரின் கவித்திறனாய்வும்

*ந. பிரகாஷ்*
*முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010*
*மின்னஞ்சல்: thambi24589@gmail.com*

## முன்னுரை

இன்றைய அவசர உலகில் உணர்வுகளுக்கு இடம் இலக்கியம் மக்களின் வாழ்வியல் விளைச்சல். மக்களின் வாழ்வியல் சூழ்நிலைக்கு ஏற்ப பல்வேறு இலக்கியங்கள் பல்கிப் பெருகி வருகின்றன. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அறிவியலின் வளர்ச்சியால் மனிதனின் சிந்தனைகளும் புதிய போக்குகளின் வடிவங்களாக வளர்ச்சி பெறுகின்றன. படைப்பாளன் படைக்கும் இலக்கியங்களின் எண்ணங்கள் நவீனத்துவம் பெற்று விரிவடைகின்றன. இலக்கியத்தின் உயிர்நாடியாகத் திகழ்வன உணர்ச்சிகளாகும்.

இவ்வாறாக, சிறந்து விளங்கக் கூடிய இலக்கியங்கள் காலம் கடந்து விஞ்சி நிற்கின்றன. படைப்பாளர்கள் தாங்கள் அனுபவித்த மற்றும் நுகர்ந்தவற்றைக் கற்பனை நயங்களுடன் உண்மை நிகழ்வுகளும் கலந்து படைப்புகளாக வெளியிடுகிறார்கள். அவ்வாறு வெளிவரும் படைப்புகள் காலம் கடந்து நிற்கின்றன. படைப்பாளர்கள் மறைந்தாலும் அவர்களின் படைப்புகள் என்றைக்கும் அழிவதில்லை. தமிழ் உலகில் இன்றளவும் போற்றக்கூடிய அறிஞர்களின் படைப்பாக்கங்கள் போற்றப்பட்டுத் தான் வருகின்றன. படைப்புகளில் இலக்கியக் கலையே தலைசிறந்த கலையாக அமைந்துள்ளது.

தமிழறிஞர்கள் தங்களின் சிந்தனைகளைக் கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் படைத்து வந்துள்ளனர். அவ்வகையில் சங்க இலக்கிய நிகழ்வுகளையும் கவிஞர்களையும் மற்றும் தலைவர்களையும் கவிதைகளாகவும், கவிதை நாடகமாகவும், உரைநடை நாடகமாகவும் பல்வேறு பரிணாமங்களில் தன் படைப்பாக்கங்களைத் தந்துள்ளார் பாவலர் ச.பாலசுந்தரம். இவரின் கவிதையாக்கங்களான அருட்புலவோரும் அரும்பெறற் கவிஞரும் என்னும் தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளில் இளங்கோவடிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## படைப்பிலக்கியம்

மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்தும் இலக்கியங்களே படைப்பிலக்கியங்களாகும். தம்முடைய அனுபவத்தில் உணர்ந்த உண்மைகளைப் படைப்பாளன் கற்பனை வண்ணத்தில் தோய்ந்து, உணர்ச்சி ததும்ப மெருகிட்டு, கலையழகு ஒளிருமாறு படைக்கும் இலக்கியத்தையே 'படைப்பிலக்கியம்' எனலாம். இலக்கியங்கள் கலையழகும் கற்பனை வளமும் பெற்றவை.

படைப்பு என்பது ஆக்கம் என்னும் பொருள்படும். அதாவது ஒன்றை உருவாக்கச் செய்யும் செயலினைக் குறிப்பதாகும். படைப்பு, படைப்பிலக்கியம் என்பதனைப் பற்றி அகராதிகளில் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. “படைப்பிலக்கியம் - புதிதாகப் படைக்கப்படும் இலக்கியம் Creative Literature, படைப்பு - கலை உணர்வுடன் புதிதாக உருவாக்கப்படும் கலை, இலக்கிய வடிவங்களில் ஒன்று; (Literary, Artistic) Creation; Work of art”[1] என்று க்ரியாவின் தமிழகராதி விளக்கம் கூறுகிறது.

படைப்புணர்வு என்பது படைப்பாளன் தகவலை ஒன்று திரட்டி வெளியிடும் பாங்கு அன்று. அவற்றின் உண்மையான பாடுபொருளை உருவாக்கி அதனூடாகக் கற்பனை ஆற்றலால் புலப்படுத்தும் திறன் படைப்புணர்வு ஆகும். கவிதை, நாடகம், புதினம், சிறுகதை என்று படைப்பாளர் படைப்பதால் படைப்புணர்வு மிகுதியாய் பெறுகின்றனர் எனக் கூறஇடமுண்டு.

இவ்வாறாக, ச. பாலசுந்தரம் கவிதை நயங்களில் தமிழ்நாட்டின் கதையினைக் காவியமாக்கிய இளங்கோவடிகள் பற்றி விவரிக்கின்றார். சிலப்பதிகாரம் தமிழர்களின் நாகரீகத்தையும் அடையாளத்தையும் காட்டக் கூடியதாகும். குடிமக்களின் வாழ்க்கையைச் சிறந்த காவியமாக்கிய இளங்கோவடிகள் அக்காலகட்டத்தின் புரட்சியாளர் எனலாம். இவரின் சிறப்புகளை மரபுக் கவிதையாக்கங்களில் புதிய நோக்குடன் கூறியுள்ளார் ச. பாலசுந்தரம்.

## கவிதை நயம்

ச. பாலசுந்தரம் எழுதிய கவிதையாக்கங்கள் யாவும் யாப்பிலக்கண நெறிக்கு உட்பட்ட மரபுக்கவிதைகளேயாகும். இக்கவிதைகளில் மொழி நயமும் ஓசை நயமும் பொருந்திய இலக்கியச் சொற்களே கையாளப்பட்டுள்ளன. மேலும், சுருங்க சொல்லல் முதலிய அழகுகளும், உய்த்துணரவைப்பு என்னும் உத்தியும் அமையப் படைக்கப்பெற்றன. இளங்கோவடிகளைப் பற்றி இளங்கோவடிகளின் மாண்பு, இளங்கோ ஏற்றமும் சிலம்புச் செல்வமும், இளங்கோவடிகள் ஆகிய மூன்று கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை இளங்கோவடிகளின் மாண்பு பற்றி விவரிப்பனவாய் அமைகின்றன.

இளங்கோவடிகளின் மாண்பு என்னும் கவிதைகள் இளங்கோவடிகள் தமிழுக்குச் செய்த சிறப்புக் குறித்து குறிப்பிடுகின்றன. கவிதையின் தொடக்கத்தில் இத்தலைப்பை எழுதியதன் நோக்கத்தையும் குறிப்பிடுகின்றார்.

களங்கோத் தெதிர்ந்த பகை வென்று
  காதல் வாழ்வைக் கொடை தமிழ்
வளங்கோத் தறத்தின் வழி பற்றி
  வண்மைத் திறத்தால் வாழ்தமிழர்
உளங் கோத் துண்மைச் சுடர்வீசி
  ஒளிர்காப் பியநூல் தந்தமிழ்
இளங் கோவடிகள் ஏற்றத்தை
  இன்பாற் சிறிதிங் இசைக்கின்றேன்[2]

என்று, தமிழுக்குச் சிறந்ததொரு காப்பியநூல் வழங்கியமையையும் ஆட்சிப் பொறுப்பிலிருந்து நாட்டையாலும் சிறப்பும் அதிகாரமும் அவருக்குக் கிடைத்ததன என்றாலும் அவற்றைத் துறந்த இளங்கோவடிகளின் பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்வதற்காக அவரைப் பாராட்டுவதாகக் கூறுகின்றார்.

அரசைத் துறந்துவிட எண்ணிய இளங்கோவடிகள் தமிழைத் துறக்கவில்லை என்றும், அரசைத் துறந்ததைக் காட்டிலும் தமிழிலே அவர் பாடிய காவியமே சிறந்தது என்றும் விதந்தோதுகின்றார் ஆசிரியர். அவரின் தமிழ் உணர்வையும் மொழிப்பற்றையும் இதன் மூலம் உணர்த்துகின்றார்.

முரசும் முழங்க முடிமன்னர்
முற்றத் திருந்து பாராட்டப்
புரசைக் களிறும் புரவியும் தேர்
பொலியும் படையும் புடைசூழப்
பாவிப் பாடிப் பாவையர்கள்
பணிந்தின் பூட்டும் பரிசுடைய
அரசைத் துறந்தும் தமிழ் துறவா
தணைத்து மகிழ்ந்த அருளாளன்[3]

என்று அமைகின்றது.

மூவேந்தர்களின் சிறப்புகளையும் பாடியுள்ளார். மேலும், வடமொழியில் மட்டும்தான் வளம்பெருங் காப்பியங்கள் இயற்ற முடியும் என்ற நிலையினை மாற்றியவர் இளங்கோவடிகள் என்று பாராட்டுகின்றார்.

மலிபுகழ் காப்பி யங்கள்
வட மொழி ஒன்றி னாற்றான்
நலமிகச் செய் தற்காகும்
நாவளம் அவர்க்கே உண்டென்
றுலவிய செருக்கை நீக்கி
உயர்தமிழ் வளத்தைத் தேக்கி
வலமிகு சிலம்பைக் கொண்டோர்
வான்புகழ் காப்பியத்தை[4]

என்கிறார் ச. பாலசுந்தரம்.

இருவகை மொழி வழக்கும் வடமொழியாளருக்கே உரியது என்றும் மற்றவர்களுக்கு இல்லை என்ற போக்கினை மாற்றியுள்ளார் இளங்கோவடிகள் என்பது ச. பாலசுந்தரனாரின் கருத்து.

மேலும், இளங்கோவடிகளின் செயலாக்கங்கள் குறித்தும், முத்தமிழிலும் தேர்ந்தவர் என்றும் கூறியுள்ளார். சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் என்பதற்கான கூற்றையும் தன் கவியாக்கம் மூலம் நிறுவியுள்ளார்.

## தொகுப்பாக

தமிழுலகிற்கு இளங்கோவடிகளின் சிறப்பினை எடுத்துரைக்கும் நோக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார். இளங்கோவடிகளின் பெருமையையும் தமிழின் சிறப்பையும் நுணுகி ஆராய்ந்துள்ளார். ச. பாலசுந்தரனாரின் கவிதையாக்கம் மூலம் புலவர்கள், கவிஞர்கள் பற்றிய சிறப்புகள் தமிழ்ச் சமூகத்திற்குப் பெரிதும் பயன் நல்கும்.

# சான்றெண் விளக்கம்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 885, க்ரியா பதிப்பகம், சென்னை, 2008.
2. பாலசுந்தரம், ச., அருட்புலவோரும் அரும்பெறற் கவிஞரும், ப. 159, தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், 2000.
3. மேலது., ப. 159.
4. மேலது., ப. 160.